www.Padasalai.Net www.Trbtnpsc.Com

**B**

# முதல் திருப்புதல் தேர்வு – 2024
## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள்:90

பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 14x1=14

1. ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள் என்று கூறும் நூல்
   அ) தமிழ்விடுதூது ஆ) சிந்தாமணி இ) சிலப்பதிகாரம் ஈ) தொல்காப்பியம்
2. வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்
   அ) பாரதியார் ஆ) இளசை மணி
   இ) பரலி சு.நெல்லையப்பர் ஈ) கவிகேசரி சாமி தீட்சிதர்
3. உலகச் சுற்றுச்சூழல்நாள்
   அ) ஏப்ரல் – 22 ஆ) மார்ச் – 20 இ) செப்டம்பர் – 5 ஈ) ஜூன் – 5
4. மதராசப்பட்டினம் என்பது
   அ) வடசென்னை ஆ) தென்சென்னை இ) மத்தியசென்னை ஈ) இவையனைத்தும்
5. 'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்' என்று கூறியவர்
   அ) இளங்கோவடிகள் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) சீத்தலைசாத்தனார்
6. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர்
   அ) தொல்காப்பியர் ஆ) சேனாவரையர் இ) இளம்பூரணர் ஈ) நச்சினார்கினியர்
7. என்னைப்போல் சிவாஜி நடிப்பார். ஆனால் என்னால் தான் சிவாஜி போல் நடிக்க முடியாது என்றவர்
   அ)மார்லன் பிராண்டோ ஆ) வி.பி.கே. மேனன்
   இ) ராஜீவ்நாத் ஈ) கள்ளிக்காடு பாலச்சந்திரன்

SS PRITHVI

8. திண்ணியர் என்பதன் பொருள்
   அ) அறிவுடையவர் ஆ) மனஉறுதியுடையவர்
   இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்
9. வெ. இறையன்பு எழுதிய எந்த நூல் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்றது.
   அ) வாய்க்கால் மீன்கள் ஆ) மூளைக்குள் சுற்றுலா
   இ) ஏழாவது அறிவு ஈ) ஐ.ஏ.எஸ். வெற்றிப் படிக்கட்டுகள்
10. 'சாப விமோசனம்' 'அகலிகை' கதைகளில் தொன்மங்களை பயன்படுத்தியவர்
   அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன்
   இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்
11. சங்ககாலப் பசும்பூண் பாண்டியன் தன்கொடியில் பொறித்த சின்னம்
   அ) வில் ஆ) புலி இ) யானை ஈ) மீன்
12. யானைபுக்க புலம்போல – இவ்வுவமைக்கு பொருத்தமான தொடர்
   அ) தனக்கு பயன்படும் பிறருக்கு பயன்படாது
   ஆ) தனக்கும் பயன்படும் பிறருக்கும் பயன்படாது
   இ) பிறருக்கு பயன்படும் தனக்கு பயன்படாது
   ஈ) தனக்கும் பயன்படும் பிறருக்கும் பயன்படும்
13. மறைத்து சொல்லவும் மிகுத்து சொல்லவும் அழுத்தி சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது ?
   அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்
14. ஔவையாருக்கு அதிகமான் கொடுத்த நெல்லிக்கனி எந்த மலையிலிருந்து பறித்து வரப்பட்டது
   அ) பிரான்மலை ஆ) பூரிக்கல் இ) கொல்லிமலை ஈ) பாபநாசம்

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



## பகுதி – II

### பிரிவு – 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

15. அகநானூறு எத்தனை பிரிவுகளை உடையது? அவை யாவை?
16. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?
17. எழுத்தாணியின் வகைகள் யாவை?
18. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

### பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

19. நடை அழகியல் பற்றி தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
20. செவியறிவுறூஉ துறை – விளக்குக.
21. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் நூல் பற்றிக் குறிப்பு வரைக.

### பிரிவு – 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    அ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்
    ஆ) வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.
23. விடைக்கேற்ற வினா அமைக்க:–
    அ) 1856–ல் தென்னிந்தியாவின் முதல் தொடர் வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.
    ஆ) குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில் தான் இடம் பெற்றுள்ளது.
24. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக:
    அ) ஆட்டுத்தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைந்திருந்தன.
    ஆ) கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.
25. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:
    அ) விலை, விளை, விழை ஆ) களம், கலம்
26. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
    அ) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.
    ஆ) இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.
27. இலக்கணக் குறிப்புத் தருக.
    அ) வெரீஇய ஆ) வியர்வை வெள்ளம்
28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:
    அ) தாமரை ஆ) தலைமை
29. கீழ்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக:
    அ) குதிரை, வேகம், ஓடு, தாவு ஆ) திரை, காண், கைதட்டல், மக்கள்
30. திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

SS PRITHVI

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



## பகுதி – III

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x4=8

31. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார் ?
32. "வாயிலோயே" – எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது – என்பதை நிறுவுக.
33. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.
34. "வருபவர் எவராயினும் நன்றி செலுத்து" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக ?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x4=8

35. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
36. மயிலை. சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்கு செய்திகளை உருவாக்கித் தருக.
37. வெ. இறையன்பு அவர்கள் நேர மேலாண்மைக்கு உதாரணமாக சொல்லிய கதையினை எழுதுக.
38. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள் ?

### பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3x4=12

39. ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்

**– இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.**

40. **கீழ்க்காணும் பாடலைப் படித்து, அதன் மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக:**

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா !
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா !
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார் !
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார் !

– கவிமணி

41. **பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக:**

அ) யானைக்கும் அடி சறுக்கும் ஆ) பதறிய காரியம் சிதறும்

42. **கோடிட்ட வெண்பா பாடலுக்கு பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

வேற்றுயிரால் ________ விளையா திருப்பதற்(கு)
ஏற்றவண்ணம் ________ இயற்றாமல் – ஆற்றலுறும்
________ இனம் வருந்தப் பேரிடர்செய் கின்றாயே
நண்பா ________ நவில் ?

(சரியோ, தொல்லை, பெண்பால், காவல்)

SS PRITHVI
www.Padasalai.Net

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



43. தமிழாக்கம் தருக:

அ) Learning is a treasure that will follow its owner everywhere.
ஆ) If you want people to understand you speak their language.
இ) Knowledge of languages is the doorway to wisdom.
ஈ) The limits of my language are the limits of my world.

பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3x6=18

44. அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைக்கொண்டு நிறுவுக.

(அல்லது)

ஆ) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன. நிறுவுக.

45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா ? அல்லது கலைகளின் சங்கமமா ? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

SS PRITHVI

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துக் கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

(அல்லது)

ஆ) கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.

பகுதி – V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக. 4+2=6

அ) 'விண்வேறு' எனத் தொடங்கும் இதில் வெற்றிபெற பாடலை அடிமாறாமல் எழுதுக.
ஆ) 'தொடர்பு' என்று முடியும் குறளினை எழுதுக.

***/***

www.Padasalai.Net

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com